சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.**153 / 2016**

வாதி / பிரதிவாதி **பி.வா.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி. T.திலகவதி அவர்களால் 44/1969 பிரிவின்படி **10.03.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | காத்தவராயன் | கிராமம் : | |
| த/பெ : | மேகவர்ணம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் திருச்சி உறையூரில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு திருச்சியை சேர்ந்த பாப்பம்மாளை தெரியும். அவர் அரிசி வியாபாரம் செய்துவந்தார். அவர் உயில் எழுதி வைத்திருந்தார். அவர் எழுதி வைத்த உயிலில் நான் சாட்சி கையொப்பம் செய்திருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ-4-ல் உயிலில் உள்ள முதல் சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி உயிலில் என்னை தவிர வேறு நபரும் சாட்சி கையெழுத்து செய்தார். மேற்படி பி.வா.சா.ஆ-4ல் இன்னார் என்று நிரூபித்தார் என்கின்ற பகுதியிலும் கையெழுத்து செய்தேன். மேற்படி பி.வா.சா.ஆ.4ல் பாப்பம்மாள் கையெழுத்து செய்தார், கைரேகையும் வைத்தார். மேற்படி பாப்பம்மாள் கையெழுத்து செய்ததை நான் நேரடியாக பார்த்தேன். நான் கையெழுத்து செய்ததை மேற்படி பாப்பம்மாள் பார்த்தார். மற்றொரு சாட்சி கையெழுத்து செய்ததை பாப்பம்மாள் பார்த்தார். மேற்படி பாப்பம்மாள் கையெழுத்து செய்ததை மற்றொரு சாட்சியும் பார்த்தார். என்னிடம் காண்பிக்கப்ப்டும் பி.வா.சா.ஆ-4ல் பாப்பம்மாள் கையெழுத்து உள்ளது. பி.வா.சா.ஆ-4ல் உள்ள பாப்பம்மாள் புகைப்படம் மற்றும் கைரேகை உள்ளது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பட்ட படிப்பு படித்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ-4 உயிலானது எந்த ஆண்டு, எந்த மாதம், எந்த தேதியில் எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த சொத்தை பொறுத்து பி.வா.சா.ஆ.4 ஆவணம் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ-4ல் கண்டுள்ள சரத்துக்களை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். பாப்பம்மாள் என்பவரை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் எனது அப்பா காலத்தில் இருந்தே தெரியும். பாப்பம்மாள் தான் என்னை அழைத்ததன் பேரில் நான் கையெழுத்து செய்தேன்.

ஐந்தாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் பி.வா.சா.ஆ.4 உயிலை தவிர வேறு ஆவணங்களில் எதிலும் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. கோபாலை எனக்கு தெரியாது, நான் பார்த்ததில்லை. பாப்பம்மாளை தவிர வேறு வாரிசுகள் யாரும் எனக்கு தெரியாது. பாப்பம்மாளை அரிசி வியாபாரம் செய்தது சம்பந்தமாக எனக்கு தெரியாது.

பாப்பம்மாள் உயில் எழுதிய சமயத்தில் எங்கு குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது. சாட்சி சொல்ல வந்தபோது கூட கடைசியாக பாப்பம்மாள் எங்கு குடியிருந்தார் என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நானும் பாப்பம்மாளும் வெவ்வேறு தாலுகா சரகத்தை சார்ந்தவர்கள். பாப்பம்மாள் அரிசி கடையை இறப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே மூடி விட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பாப்பம்மாளிடம் கைபேசி இல்லை. பாப்பம்மாளுக்கு எந்தமாதிரியான சொத்துக்கள் இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. பாப்பம்மாள் என் வீட்டிற்கு வந்துள்ளார். பாப்பம்மாள் என்னை தொடர்பு கொள்ள வேண்டும் என்றால் செல்போன் வசதி இல்லை என்றால் சரிதான். கடைசியாக 2017ம் ஆண்டு பாப்பம்மாள் என் வீட்டிற்கு வந்தார். அதன்பின்னிட்டு நான் அவரை பார்க்கவில்லை. 2017ம் வருடம் தான் நான் பாப்பம்மாள் என்பவரை கடைசியாக பார்த்தேன் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் 2019ம் வருடம் உயில் ஆவணத்தில் பாப்பம்மாள் என்பவர் கையெழுத்திட்டதாக நான் கூறுவது வழக்கிற்காக கோபால் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாப்பம்மாள் எவ்வாறு கையெழுத்திடுவார் என்றும், அவருக்கு என்ன சொத்துக்கள் உள்ளது என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் கோபால் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பாப்பம்மாள் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் எத்தனை கையெழுத்து போட்டார் என்று எனக்கு தெரியாது. பாப்பம்மாள் ஆங்கிலம் மற்றும் தமிழில் கையெழுத்திடுவாரா என்றால் தமிழில் தான் கையெழுத்திடுவார்.

மறுவிசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.